# December 4, 2025 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தமிழகத்தின் பாரம்பரியமிக்க தூயமல்லி அரிசி மற்றும் கவுந்தப்பாடி நாட்டு சர்க்கரைக்கு புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது. இது குறித்து தமிழக வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை சார்பில் வெளியிட்ட செய்திக் குறிப்பு:
   1. கடந்த 2021-ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் பாரம்பரிய மிக்க வேளாண் விளை பொருள்களைக் கண்டறிந்து அவற்றுக்கு புவிசார் குறியீடு பெற அரசு சார்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த வகையில், கடந்த 4 ஆண்டுகளில் மொத்தம் 41 வேளாண் பொருள்களுக்கு புவிசார் குறியீடு பெற தமிழக மாநில வேளாண்மை விற்பனை வாரியம் சார்பில் விண்ணப்பிக்கப்பட்டது. அதில், சோழவந்தான் வெற்றிலை, பண்ருட்டி பலாப்பழம், பண்ருட்டி முந்திரி, விருதுநகர் சம்பா வத்தல், ராமநாதபுரம் சித்திரைக்கார் அரிசி, புளியங்குடி எலுமிச்சை, செட்டிக்குளம் சின்ன வெங்காயம் ஆகியவற்றுக்கு ஏற்கெனவே புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளது.
   2. இதன் தொடர்ச்சியாக, தற்போது தூயமல்லி அரிசி மற்றும் கவுந்தப்பாடி நாட்டு சர்க்கரைக்கு புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளது. இதன்மூலம், கடந்த 4 ஆண்டுகளில் 9 வேளாண் பொருள்களுக்கு புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.
   3. வேளாண் பொருள்களுக்கு புவிசார் குறியீடு பெறுவதால், அவற்றை எளிதாகச் சந்தைப்படுத்த முடியும். மேலும், அவற்றின் தேவை மற்றும் ஏற்றுமதி அளவும் அதிகரித்து, வேளாண் வணிகம் விரிவுபடுத்தப்படுவதுடன், பொருளாதார வளர்ச்சியில் மேம்பாடு அடையவும் வழிவகுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
2. 16 நாடுகளைச் சேர்ந்தவர்களின் குடியேற்ற விண்ணப்பங்களை அமெரிக்க அரசு தற்காலிகமாக முடக்கியுள்ளது. இது, கடந்த ஜூன் மாதத்தில் அறிவிக்கப்பட்ட பயணத் தடை உத்தரவின் தொடர்ச்சியாகும். நிரந்தர குடியேற்ற உரிமம் (க்ரீன் கார்ட்), குடியுரிமை விண்ணப்பங்கள் உள்பட அனைத்து குடியேற்ற செயல்முறைகளும் இந்த புதிய உத்தரவால் பாதிக்கப்படும். தேசிய பாதுகாப்பு மற்றும் பொது பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது.
   1. இது குறித்து அமெரிக்க குடியுரிமை மற்றும் குடியேற்ற சேவை (யுஎஸ்சிஐஎஸ்) இயக்குநர் ஜோசப் எட்லோவின் பிறப்பித்துள்ள உத்தரவில், 'ஆப்கானிஸ்தான், மியான்மர், சாட், காங்கோ, ஈக்வடோரியல் கினியா, எரித்ரியா, ஹைட்டி, இரான், லிபியா, சோமாலியா, சூடான், யேமன் உள்ளிட்ட 16 நாடுகளைச் சேர்ந்தவர்களின் அனைத்து விண்ணப்பங்களும் 'முழுமையான மறு ஆய்வுக்காக திருப்பி அனுப்பப்படும். இதில் மறுநேர்காணல்கள் நடத்தப்படலாம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
3. தூத்துக்குடி வ.உ. சிதம்பரனார் துறைமுக ஆணையம் நிலையான துறைமுக செயல்பாடுகளை மேம்படுத்துவதற்காக, ரூ.385.76 கோடி மதிப்பில் பசுமை இழுவைப் படகை வாங்கவுள்ளது.
   1. இதற்கான ஒப்பந்தம் கேஎம்இடபிள்யு நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இப்படகு 2 ஆண்டுகளுக்குள் வழங்கப்படும். இந்தக் கொள்முதல் பசுமை இழுவைப் படகு மாற்றத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். இது, முக்கியத் துறை முகங்களில் டீசலில் இயங்கும் இழுவைப் படகுகளை படிப்படியாக நீக்கி, அவற்றை மின்னூட்டி, அமோனியா, ஹைட்ரஜன் மூலம் இயக்கப்படும் பசுமை

இழுவைப் படகுகளாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட முயற்சியாகும்.

ii. இம்முயற்சி உலகளாவிய கால நிலை நடவடிக்கைக்கு இந்தியாவின் பங்களிப்பை வலுப்படுத்தக் கூடிய 5 முக்கிய காலநிலை உறுதிப்பாடுகளை அறிவிக்கிறது. பிரதமர் நரேந்திர மோடியின் அறிக்கையில் கூறியபடி, நாட்டின் படிம எரிபொருள் அல்லாத எரிசக்தித் திறனை 500 ஜிகாவாட் ஆக அதிகரித்தல், 2030- ஆம் ஆண்டுக்குள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் நாட்டின் 50 சதவீத எரிசக்தி தேவையைப் பூர்த்தி செய்தல், திட்டமிடப்பட்ட கார்பன் வெளியேற்றத்தை 100 கோடி டன்கள் குறைத்தல் போன்றவை இதில் அடங்கும் என, வ.உ.சி. துறைமுக ஆணையத் தலைவர் சுஷாந்த குமார் புரோஹித் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

4. டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டிக்கான இந்திய அணியின் கேப்டனாக, ரோஹித் ராஜ்பால் 2026 டிசம்பர் 31 வரை நீட்டிக்கப்பட்டுள்ளார்.

5. இங்கிலாந்தின் பிரீமியர் லீக் கால்பந்து போட்டியில், அதிவேக 100 கோல்கள் அடித்தவராக (111 ஆட்டங்கள்) மான்செஸ்டர் சிட்டி வீரர் எர்லிங் ஹாலந்த் சாதனை படைத்தார்.

6. டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு முதல்முறையாக ரூ.90-ஐ தாண்டியது. இதன் மூலம், டாலருக்கு நிகரான ரூபாய் வரலாறு காணாத வீழ்ச்சியடைந்துள்ளது.

i. தற்போதைய வீழ்ச்சியின் மூலம், நிகழாண்டில் இதுவரை ரூபாய் மதிப்பு 5.7 சதவீதம் சரிந்துள்ளது. 2022-ஆம் ஆண்டுக்குப் பிறகு ஓராண்டில் ரூபாய் மதிப்பு சதவீத அடிப்படையில் இந்த அளவுக்கு சரிவது இதுவே முதல்முறை. இதன்மூலம், ஆசிய செலாவணிகளில் மிக மோசமான சரிவு ரூபாய் மதிப்புக்கு ஏற்பட்டுள்ளது.

7. கைப்பேசிகளில் சஞ்சார் சாத்தி செயலியை நிறுவனங்கள் முன்கூட்டியே கட்டாயம் நிறுவ வேண்டும் என்ற உத்தரவை மத்திய அரசு திரும்பப்பெற்றது.

i. கைப்பேசிகளில் இந்த செயலி கட்டாயம் நிறுவப்படுவது தனியுரிமை விதிமீறல் என்றும் உளவு பார்க்கும் நடவடிக்கை என்றும் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க் கட்சிகள் கடுமையாக விமர்சித்த நிலையில், இந்த உத்தரவு திரும்பப்பெறப்பட்டுள்ளது.

ii. முன்னதாக இந்தச் செயலியை மக்கள் நீக்க விரும்பினால் நீக்கிக் கொள்ளலாம் என்று மத்திய தக வல்தொடர்பு அமைச்சர் ஜோதி ராதித்ய சிந்தியா விளக்கமளித்தார்.

iii. மோசடிகள் குறித்து புகாரளிப்பதற்காக மத்திய தகவல்தொடர்புத் துறை சார்பில்'சஞ்சார்சாத்தி செயலி உருவாக்கப்பட்டது.

iv. இந்தியாவில் விற்பனைக்கு வரும் அனைத்து புதிய கைப்பேசிகளிலும் இந்தச் செயலியை முன்கூட்டியே நிறுவுமாறும் ஏற்கெனவே விற்பனைக்குத் தயாராக இருக்கும் கைப்பேசிகளில் மென்பொருள் புதுப்பித்தல் மூலம் பதிவேற்றுமாறும் மத்திய அரசு அண்மையில் உத்தரவிட்டிருந்தது. அரசின் இந்த உத்தரவு சர்வாதிகாரத்தைக் காட்டுவதாகவும், குடிமக்களின் தனியுரிமையைப் பறிப்பதாகவும் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டின.

8. போலியான தகவல்கல் மற்றும் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில்நுட்பம் மூலம உருவாக்கப்பட்ட போலியான விடியோக்கள் சமூக ஊடகங்களில் பரப்பப்படுவதைத் தடுக்கவும், அவ்வாறு பரப்புபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும் வகையிலும் புதிய விதிகளை வகுக்க நடவடிக்கை

மேற்கொள்ளப்பட்டு வருகிறது' என்று நாடாளுமன்றத்தில் மத்திய அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது.

9. சிகரெட் உள்ளிட்ட புகையிலைப் பொருள்கள் மீது கலால் வரி விதிக்க வகை செய்யும் மசோதாவுக்கு மக்களவையில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
    i. 56-ஆவது ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில், சிகரெட், புகையிலைப் பொருள்கள் உள்ளிட்ட சில பொருள்கள் மீது 40 சதவீத சிறப்பு வரி விதிக்கப்பட்டது.
    ii. புகையிலை, பான் மசாலா உள்ளிட்ட பொருள்கள் மீது கூடுதல் வரி விதிக்க ஏதுவாக அவற்றின் மீது கலால் வரி விதிக்கும் வகையில் மத்திய கலால் திருத்தச் சட்ட மசோதா 2025, மற்றும் பான் மசாலா உற்பத்தி மீது புதிய செஸ் வரி விதிக்கும் தேசிய பாதுகாப்பு செஸ் மசோதா 2025 ஆகிய இரண்டு மசோதாக்களை மக்களவையில் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்தார்.